# இஸ்லாமியப் பார்வைக்குள் படைப்பிலக்கியம்

அஷ்ஷைக் எம்.ஏ.ஹபீழ் ஸலபி,ரியாதி (M.A)

**தொடர் – 02**

## இலக்கியம் என்பது...

இலக்கியம் குறித்து, இலக்கியவாதிகளால் பல்வேறு விளக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவை அனைத்தையும் ஒருங்கிணைத்து, இரத்தினச் சுருக்கமாக நோக்கின், "சொல்லில் அழகைப் புலப்படுத்தி, வாழ்க்கைக்குரிய உண்மை இலக்கினை இயம்புவது இலக்கியமாகும்" என வரைவிலக்கணப்படுத்தலாம். எப்படி கல்லில் அழகை வெளிப்படுத்தி, ஒரு பொருளை வடித்தெடுப்பதை, சிற்பக் கலை என்கிறோமோ, அதுபோலச் சொல்லின் அழகை வெளிப்படுத்தி, வாழ்க்கை இலட்சியத்தைச் சுட்டுவது இலக்கியக் கலையாகும்.

இந்த நோக்கில், வாழ்க்கை உண்மைகளை அழகு படப் பாடிய இலக்கியங்கள் தமிழில் ஏராளமாகவும் தாராளமாகவும் உள்ளன. அதேவேளை, அழகுபடக் கூறவேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக உண்மைகளைப் பலிபீடத்துக்கு அனுப்பிவிட்டு, அழகையே ஆராதித்துக் கொண்டிருந்த, கொண்டிருக்கின்ற இலக்கியவாதிகளும் பலர் இன்றும் நம்மிடையே உலா வருகின்றனர்.

யதார்த்தத்திற்கும் உண்மைக்கும், மனசாட்சிக்கும் எதிரான பொய்யும் புனைச் சுருட்டும் கற்பனையும் செவிவழிச் செய்திகளும், புனையப்பட்ட கதைகளும், அழகியல் என்னும் பெயர் தாங்கி இலக்கியத்தின் பாடுபொருளாகப் பவனி வரலாயிற்று.

உண்மைகளை உலவ விட வேண்டும் என்ற நிலை பின்னுக்குத் தள்ளப்பட்டு, போலிகளை உலவ விடும் போலிகள் அதிகரித்து, பொய்யாயினும் புழுகு மூட்டையாயினும், கவர்ச்சியோடு கூறினால், அது இலக்கியமகிவிடும் எனும் எண்ணம் படைப்பவனிடமும் (இலக்கியவாதிகளிடமும்) படிப்பவனிடமும் (இலக்கியப் பிரியர்களிடமும்) பரவி, சமுதாயம் அறியாமைக்குள் அஸ்தமனமாகிக் கொண்டிருக்கிறது.

அல்குர்ஆன் அருளப்பட்ட காலத்திலும் இந்த இழிநிலைதான் உலக இலக்கியங்கள் அனைத்திலும் மேலோங்கி இருந்தது. எனவே, அத்தகைய போலிகளை தோலுரித்துக் காட்ட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதனால், அல்குர்ஆனின் பின்வரும் வசனங்கள் இலக்கியம் பற்றிய இஸ்லாத்தின் அணுகுமுறையைத் தெளிவாக எடுத்துரைத்து, இலக்கியவாதிகளை நெறிப்படுத்தியது.

**"(விசுவாசிகளே!) எவர் மீது ஷைத்தான்கள் இறங்குகின்றனர் என்பதை நான் உங்களுக்கு அறிவிக்கவா? பொய் சொல்லும் ஒவ்வொரு பாவியின் மீதும் இறங்குகின்றனர். தாங்கள் கேள்விப்பட்டதை (எல்லாம் அவை அவர்களுக்குக் கூறுகின்றனர். அவர்களில் பெரும்பாலானோர் (பெரும்) பொய்யர்களே! கவிஞர்களையும் வழிகெட்டவர்கள் தாம் பின்பற்றுகிறார்கள். நிச்சயமாக, அவர்கள் ஒவ்வொரு திடலிலும் தட்டழிந்து திரிகிறார்கள் என்பதை (நபியே!) நீர் பார்க்கவில்லையா? நிச்சயமாக அவர்கள் செய்யாத காரியங்களை(ச் செய்ததாகக்) கூறுகிறார்கள்."**

(அல்குர்ஆன் 26:221-226)

உண்மையை, யதார்த்தத்தை அழகுறப் பாடி, வாழ்க்கை இலட்சியத்தை உண்மை நெறிக்குட்பட்டு, சத்தியத்தை எடுத்தியம்பும் இலக்கியங்களை அது எதிர்க்கவில்லை. அவற்றை ஆதரவுக் கரம் நீட்டி வரவேற்கிறது. ஆனால், உண்மையை மொட்டையடித்து விட்டு, அதன் தலையில் பொய்யை, அல்லது அசத்தியமான, உண்மைக்குப் புறம்பான அளவுக்கு மீறிய கற்பனைகளை உலவ விடும்

நச்சிலக்கியங்களையே, அது கடுமையாகக் கண்டிக்கிறது. அத்தகைய நச்சிலக்கியம் படைக்கும் பொய்யர்களை அல்குர்ஆன் ‘ஷைத்தான்’கள் என்றே அடையாளப்படுத்துகிறது.

## அந்நிய இலக்கியத் தாக்கம்

இன்றைய அவசர யுகத்தில் அல்லல்படும் இலக்கியம், மனிதனின் அழகுணர்வு வெளிப்பாட்டைச் செம்மைப் படுத்தி, ஒழுக்கப் பண்பாட்டை, மனித நேயத்தை அவனில் வளர்ப்பதற்குப் பதிலாக, அவனது கீழான உணர்வுகளைத் தூண்டி, அவனை வெறியாட்டமாட வைத்திருக்கிறது.

சமூகவியல் நோக்கும், வரலாற்று உணர்வும், வரலாறு படைத்த தத்துவங்கள் பற்றிய ஆழ்ந்த கண்ணோட்டமும் ஒப்பியல் பார்வையும் அழுத்தமான முருகியல் (Aesthetics) உணர்வும் நடு நிலையோடு நோக்கும் திறனாய்வுப் பார்வையும் இலக்கியப் பார்வையில் அழுத்தமாகப் பதியும் போது மட்டுமே சிறந்த திறனாய்வு மலர முடியும். இத்தகைய சிறந்த திறனாய்வு மலரும் போது மட்டுமே, சிறந்த படைப்புகளும் தோன்ற முடியும். ஆனால், இத்தகைய சமூகவியல் கண்ணோட்டம் கால்கொள்ளவில்லை. முஸ்லிம்களிடையே இவற்றைக் காண முடியாத நிலையே தொடர்கிறது. இதன் பரிதாப நிலையை நாம் இன்று அனுபவிக்கிறோம்.

சமய சார்பற்ற சிந்தனைத் தளத்தில் நின்று கொண்டு, தலைகால் புரியாமல் இலக்கியம் படைப்போர், மதம் - கடவுள் பற்றிய எள்ளி நகையாடி, இறை நம்பிக்கையை மலினப்படுத்தியுள்ளனர். மத வாழ்வைக் கேள்விக்குட்படுத்தி, கொச்சைப்படுத்தும் நாவல்களும் கவிதைகளும் நாடகங்களும் தற்போது, மிக அதிகமாகவே வெளிவரத் தொடங்கியுள்ளன.

இஸ்லாமிய இலக்கியம் இறைநெறிக்குட்பட்டுப் பேசும். ஆனால், அந்நிய இலக்கியங்கள், அந்தந்த சமூகம் சார்ந்த கலாசார மரபுகளைப் பிரதிபலித்துக் கொண்டு செல்லும். அவை, அந்த இலக்கிய மரபுகளில் தவிர்க்க முடியாதவை. அங்கே, ஆண்-பெண் அந்தரங்க உறவுகள், சினிமாச் சில்மிசங்கள், அந்தரங்கச் சதை வியாபார வெறியாட்டங்கள் என்பன அந்தந்தச் சமூக பண்பாட்டுக் கலாசார மரபுகளின் சிந்தனைக் கேற்ப, கதைகளில் நாவல்களில், கவிதைகளில், பாடல்களில் வெளிப்படும்.

சிலபோது, வக்கிரத்தை வெளிப்படுத்துமாப் போலும், அமைந்து விடுகிறது. பெற்ற தாய்-தந்தைக்குத் தெரியாமல், ஊரைவிட்டு ஓடிப்போகும் காதல் சமாச்சாரங்கள் பல வடிவங்களில், சங்க இலக்கியத்தில் காணப்படுகிறது. இதற்கு உடன் போக்கு என்று பெயர். **உடன் போக்கு** மேற்கொண்டவர்கள் பிறந்த இடத்துக்குத் திரும்பி வரமாட்டார்கள். இதன் தாக்கத்தால், இன்றைய காதலர்கள்(?) சொல்லிக் கொள்ளாமல் போகிறார்கள். சொல்லாமலே வந்தும் விடுகிறார்கள். சிலபேர் ஏமாற்றப்பட்டதால் உலகை விட்டே ஓடிவிடுகிறார்கள் என்பதை அன்றாடம் அறிகிறோம்.

சங்க கால இலக்கியக் காதலர்கள் மணம் முடிக்க ஓடினார்கள். அதன் இலக்கிய விரச ரசனைக்கு ஆட்பட்ட இன்றைய கால காதலர்கள் மணம் முடிக்காமல், வக்கிரத்தை வெளிப்படுத்த ஓடுகிறார்கள். இவர்கள் அதில் சேராமல் காதலர் தினம் (Valentine Day) என்று, பெப்ரவரி 14ம் தேதியை தமது வக்கிர எண்ணத்தை வெளிப்படுத்த ஏற்படுத்திக் கொண்டுள்ளார்கள். இந்தக் கேடுகெட்ட கலாசாரத்திற்கு தொலைக்காட்சிகளும், பத்திரிகைகளும் தூபம் இட்டு வளர்த்தும் வருகின்றன.

உண்மையை மட்டும் பேசும், உள்ளார்ந்த, இஸ்லாமிய இலக்கியங்கள் கிடைக்காத போது, இஸ்லாமிய இளைஞன், பிற இலக்கியங்களில் ரசனைத் தாகம் தணிப்பது தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது. அவற்றைப் படிக்கத் துவங்கும் போது அவை, வாசகன் மீது சிறுகச் சிறுக தாக்கத்தையும் மாற்றத்தையும் ஏற்படுத்தத் துவங்குகிறது. எனவே, அந்நிய இலக்கியத்தில் தாகம் தீர்க்கும் வாசகன், அவற்றைப் பிரதிபலிக்கும் பிரதிநிதியாகவே நாளடைவில் மாற்றமடைகிறான். நமது பெரும்பாலான மக்களுக்கு வழிகாட்டி, தமிழ்ச்சினிமாப் படங்கள், பாடல்கள், சில புத்தகங்கள், நாவல்கள் விரசத்தைக் கக்கும் பத்திரிகைகள் என்பனவாகிவிட்டன. மோசமான சினிமாப் படங்கள், அவற்றுக்குக் கூஜா தூக்கி வயிற்றைக் கழுவும் பத்திரிகைகள், கல்லூரியில், கலாபீடங்களில், பல்கலைக்கழகங்களில், ஏன் அரபு மதரஸாக்களில் படித்த அதிக இளைஞர்களிடம் அமெரிக்க மேற்கத்திய ‘ஹிப்பி’ கலாசாரத்தையும், அரைகுறைப் படிப்பாளர்களிடம் தமிழ்ச் சினிமாக் கலாசாரத்தையும், இலக்கியம் என்ற போர்வையில் திட்டமிட்டு இன்னும் பரப்பி வருகின்றன பல பத்திரிகைகள்.

எனவே, அத்தகைய அந்நிய இலக்கியம் பற்றிய சில உதாரணங்களை இங்கே குறிப்பிட்டுக் காட்ட முனைகிறோம். அகிலன் ஒரு பிரபல்யமிக்க எழுத்தாளன். எனினும், அவர் தனது நாவல்களில் சமுதாயத் தலைவர்கள் என்று உலவும் காவலர்களை அடையாளப்படுத்த முனையும் போது, விபச்சாரத்தையும், வேசிகளையும் ஆதரிக்க முனைந்து, நாவலையே நாசப்படுத்தி விடுகிறார். இதற்கு ஓர் உதாரணத்தை கீழே தருகின்றேன்.

“வேசித் தனத்தால் தன் உடலை மூலதனமாக்கிப் பொருள் குவிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்ட ஒரு பெண்ணை வேண்டுமென்றே தான், நான் இந்தக் கதைக்குத் தலைவியாக்கிக் கொண்டேன். சமுதாயப் பிரமுகர்கள் என்ற போர்வையில் உலவும் சிலர், அவளை விடவும் சீரழிந்தவர்கள். காசுக்காகத் தங்கள் மனசாட்சி, சொல், செயல், ஆன்மா இவ்வளவையும் விபச்சாரம் செய்யும் போலிகள் இவர்கள். சமுதாயத்தில் அங்கங்கே கயவர் இருக்கத்தான் செய்வர். ஆனால், கயவர்களை வழிகாட்டிகளாகக் கொள்ளும் சமுதாயம் உருப்படுமா? என்பது தான் நான் இந்த நாவலில் எழுப்பியுள்ள கேள்வி”

(பார்க்க: அகிலன், நாம் எங்கே போகிறோம்? பக்கம்:05)

கவிஞர் கண்ணதாசன், தனது தாயிடமும், தாரத்திடமும் அடையாத இன்ப அனுபவத்தை விலைமாதுகளிடம் அனுபவித்ததாக தனது சில நூல்களில் எழுதியுள்ளார்.

‘‘என் அருகில் இருக்கும் பெண்கள், அவர்கள் விலைமகளிர். ஆயினும் பயபக்தியோடு என்னைக் கவனிப்பார்கள்; பணிவோடு எனக்கு சேவை செய்வார்கள்;’’ ‘‘ஐயா’’ என்றுதான் அழைப்பார்கள்....

விலைமாதர் உறவும், மதுப்பழக்கமும், எந்த நாட்டிலும் வேண்டாத பழக்கம் என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறதே தவிர ‘தர்ம விரோதம்’ என்று கருதப்பட்டதில்லை.

இந்து வேதங்களும் அப்படிக் கூறியதில்லை.

தமிழகத்து விலைமாதர்கள், தங்கள் குடும்பங்களுக்காகத் தங்களைத் தியாகம் செய்து கொண்டவர்கள்.

பத்து ஆண்டுகளுக்கு முன் பெங்களூர் ஹோட்டல் ஒன்றில் ஒரு விலைமகளைச் சந்தித்தேன்...

வெறும் ‘சேட்டை’களை மட்டுமே கண்டிருந்த அவள், இப்படி ஓர் அப்பாவியைச் சந்தித்ததில் ஆச்சரியப்பட்டாள்.

இவர்களை (வேசிகளை) எல்லாம் மனிதிலே எண்ணிய போதுதான், விலைமாதர் போக்கை நியாயப்படுத்த எனக்குத் தோன்றிற்று.

‘‘விளக்கு மட்டுமா சிவப்பு’’ அதிலேதான் பிறந்தது.

வெறும் காமத்தை மட்டுமே மூலமாகக் கொண்டு விலைமாதரை நான் நெருங்கியதில்லை. அவர்களிடம் இருந்து நிறைய அனுபவங்களைப் பெற்றிருக்கிறேன்.’’

(பார்க்க: கவிஞர் கண்ணதாசன், எனது வந்தகாலங்கள் (1989) பக்கம்: 49,50)

கவிஞர் கண்ணதாசன் ‘விளக்கு மட்டுமா சிவப்பு?’ ‘நடந்தகதை’ என்ற இரு நாவல்களும் இன்னும் சில அவரது நூல்களும் விபசாரத்தை ஒரு தொழிலாக அங்கீகரிப்பதோடு, நியாயப்படுத்தவும் முனைகின்றன.

வைரமுத்துவின், ‘வில்லோடு வா நிலவே’ என்ற நாவல், வரலாற்றோடு காதலையும் தற்கொலையையும் நியாயப்படுத்துகிறது. ‘காவி நிறத்தில் ஒரு காதல்’, ‘வானம் தொட்டுவிடும் தூரம்தான்’, ‘ஒரு போர்க்களமும் இரண்டு பூக்களும்’, ‘மீண்டும் என் தொட்டிலுக்கு’ போன்ற வைரமுத்துவின் அனைத்து நாவல்களும் காம விரசத்தோடு கலந்த காதல் கதைகளாகவே நகர்த்தப்படுகிறது. அதில், ‘வானம் தொட்டுவிடும் தூரம்தான்’ என்ற நாவலில் பள்ளிப் பருவ வாலிபக் காதலை வலியுறுத்துவதாகவும் கதை நகர்த்தப்படுகிறது. ‘காவி நிறத்தில் ஒரு காதல்’ என்ற நாவல், காதல் கைகூடாத போது, காவி அணிந்து, சாமியாகி அப்போதும் காதல் உணர்வை கைவிடமுடியாமல்,

பதினெட்டு ஆண்டுகளுக்குப் பின்னரும் காதலியைத் தேடி பயணிப்பதையும், காதலியின் தங்கை விபச்சாரியாக மாறி இருப்பதையும் சித்திரிக்கிறது.

இதே போல், ஆணாதிக்கத்தை சமூகத் தளத்தில் நின்று அணுகி, விமர்சிக்க முனைந்த ஜானகி ராமனின் 'மோகமுள்' என்ற நாவல், தீவிர பெண் நிலை வாத சிந்தனையைப் பிரஸ்தாபித்து, பெண்ணை மையமாகக் கொண்டு ஆண் வாழ்வதை எடுத்துக்காட்ட முற்படுகிறது.

இவ்வாறு, இங்கு நாம் சிலவற்றையே நாவல் இலக்கிய சமுத்திரத்திலிருந்து அடையாளப்படுத்தினோம். அவற்றில் சில சமூக வாழ்வின் அவலங்களையும், பொருளாதார அவதிகளால், புதைந்து போன உறவுகளையும், அவசர யுகத்தில் அல்லாடும் தாய்மையினையும், இயந்திர வாழ்க்கையில் துருப்பிடித்துப் போன நட்பையும். கால வேகத்தில் மியூசியத்துக்கு அனுப்பப்பட்ட மனிதத்தையும் படம்பிடித்துக் காட்ட முற்பட்டாலும், சில கொடிய சமூகத் தீமைகளைத் தவிர்க்க முடியாத ஒன்றாகக் காட்டி, நியாயப்படுத்த பகீரதப் பிரயத்தனப்படுகின்றன.

இதேபோன்று, ஆயிரமாயிரம் நாவல்களும் சிறுகதைகளும் கவிதைகளும், இஸ்லாத்திற்கு முரணான, எதிரான கருப்பொருள்களில் அமைந்துள்ளன. இவை, அந்நிய இலக்கியங்களில் மலிந்தும் நிறைந்தும் கிடக்கும் நச்சுத் துளிகளில் சில. பிற காவியங்களுக்குள் இழையோடும், அவற்றின் கலாசார, பாரம்பரிய சமூக மரபுகளையும், உணர்வுகளையும் புட்டு புட்டு வைக்க நாம் முனைந்தால் பல ஆயிரம் பக்கங்களில் பல வால்யூம்களில் எழுத நேரிடும். எனவே, நாம் சிலவற்றை அடையாளப்படுத்தியுள்ளோம். அவை, வாசிப்போருக்கு மிகத் தெளிவாகும். நாம் குறிப்பிட்ட உதாரணங்கள் எவ்வளவு மோசமானவை. எவ்வாறு இஸ்லாமிய சிந்தனைக்கு முரணானவை என்பதையே தெளிவுபடுத்த முனைந்துள்ளோம்.

அதே வேளை, முஸ்லிம் சமூகத்தின் உள்ளே இருந்து கொண்டே இஸ்லாத்தை மாசுபடுத்தியும், சிதைத்தும், திரித்தும், எழுதவும், பேசவும் கூடியவர்கள் உருவாகி இருக்கின்றார்கள். இத்தகையவர்களிடம் நாம் மிக அவதானமாக இருக்க வேண்டும். அதற்காக, நான் சில ஆண்டுகளுக்கு முன்னர் வாசித்த, இஸ்லாத்திற்கு எதிராக எழுதப்பட்ட இரண்டு நாவல்கள் பற்றி இங்கே குறிப்பிட விளைகிறேன்.

அவை:

1. சாய்வு நாற்காலி
2. சந்திரகிரி ஆற்றங்கரையில் (மொழிபெயர்ப்பு நாவல்)

இன்னும் வளரும் – இன்ஷா அல்லாஹ்